**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**

**முன்னிலை. செல்வி. மு.அபிநயா., B.A. B.L.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05-ம் நாள் செவ்வாய் கிழமை,

இ.ம.எண்.7/2024 in அ.வ.எண்.120/2017

---------

1. பிச்சை
2. செல்லபாப்பு

... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

அர்ச்சுணன்

... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 01.10.2024-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.இராமானுஜம் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை, இந்நீதிமன்ற ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 16 விதி 1, 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மண்ணச்சநல்லூர், வருவாய்

வட்டாட்சியர் அவர்களை சாட்சியாக விசாரணை செய்திட அனுமதியளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 16 விதி 1, 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களை பொறுத்த நத்தம் அ பதிவேடு நகல்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் இல்லை என்றும் மேலும் மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நகல் கேட்டு விண்ணப்பித்தாலும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதாக கூறி நகல் தர மறுக்கிறார்கள் என்றும் வழக்கு சொத்தை அடுத்த புல.எண்.224/1F2 அடங்கல் நகலும், மேற்படி புல எண்ணில் 224/1F உட்பிரிவுகளை பொருத்த அடங்கல் நகல்களும் வழக்கு சொத்துப் புல எண்.224/1G2, புல எண்.224/1F3, புல எண்.244/1G1 அடங்கல் நகல்களும் இவ்வழக்கில் இன்றியமையாத ஆவணங்கள் ஆகும் அதனால் தான் இம்மனுவை வருவாய் வட்டாட்சியர் மண்ணச்சநல்லூர் அவர்களை சிறுகனூர் கிராம மேற்கண்ட நத்தம் புல எண்களை பொருத்த அ பதிவேடு நகல்களுடன் வந்து

சாட்சியம் அளிக்க ஏதுவாய் அவரை விசாரிக்க அனுமதித்து உத்தரவிட கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஈடு செய்ய இயலாத இழப்பும் ஏற்படும் என்றும் எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

4. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் இம்மனு தவறானது பொய்யானது மற்றும் மோசடியானது என்றும் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் ஏற்கனவே இடைக்கால மனு மற்றும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பு 3 வது சாட்சி மூலம் தாக்கல் செய்யப்பட்டு அது உரிய சான்றாவனமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி விபரம் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும் பலன் அளிக்கக்கூடிய உரிய வகையிலான நிவாரணங்களை விட்டு விட்டு ஏதேனும் ஒரு மனு நடவடிக்கையை தொடர்ந்து வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்றும் எனவே இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

5. மனு, எதிர்மனுவுரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்ய கூறியுள்ள காரணம் ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா.3 தனது குறுக்கு விசாரணையின் போது தனக்கு புல எண்.224/1 F1 ஐ பொருத்த ஆவணம் கொண்டு வரவேண்டும் என்று அழைப்பாணை வந்தது என்றும் அதை கொண்டு வரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வா.சா.3 தனது சாட்சியத்தில் புல எண்.224/1 F1 மற்றும் புல எண்.224/1F2 ஐ பொருத்த அடங்கல் கணக்கு தனது அலுவலகத்தில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்கண்ட சூழ்நிலையில் எதிர்மனுதாரர் கூறுவது போல மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்டது என்பது ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் மாறாக இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரருக்கு எந்த ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே வழக்கு பெருக்கத்தை தவிர்த்திவிடவும் நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 05-ம் நாள் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை

ஒப்பம்/-மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

M ABINAYA

Digitally signed by M ABINAYA
Date: 2024.11.05 18:25:40 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.